අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/59/07/08/01 වෙළු V
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.10.

திரு/ திருமதி/ செல்வி ........................................... நேர்முகப் பரீட்சை இலக்கம் : ...........................
...............................................
...............................................

**<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்குரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்.</u>**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 11.2.2 இற்கமைய நடாத்தப்படும் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தாங்கள் அழைக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. இதற்காக பத்தரமுல்ல, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் 04 ம் தளத்தில் உள்ள கூட்ட மண்டபத்திற்கு 2024 ............. ம் திகதியன்று மு.ப/ பி.ப.................... மணிக்கு சமூகமளிக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அத் தினத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் நகல் பிரதிகளை தனித் தனியாக (இலக்கம் I முதல் X வரை பார்க்கவும்) இரண்டு *(02)* கோவைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப் படி தயாரித்து தங்களது பெயர் மற்றும் நேர்முகப் பரீட்சை இலக்கத்தைக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும். அனைத்து ஆவணங்களையும் அன்றைய தினத்திலேயே முன்னிலைப்படுத்துவது கட்டாயம் என்பதுடன், பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் சான்றிதழ்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

I. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்.
II. பிறப்புச் சான்றிதழ் (பெயர் வித்தியாசம் இருப்பின் அதற்கான சத்தியப் பிரமானம்)
III. தேசிய அடையாள அட்டை
IV. சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக
    a) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கான நியமனக் கடிதம்
    b) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் நிரந்தரப்படுத்தல் கடிதம்
    c) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு 2-II இற்கு பதவி உயர்வு பெற்றமைக்குரிய கடிதம்
    d) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு 2-I இற்கு பதவி உயர்வு பெற்றமைக்குரிய கடிதம்

e) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு I இற்கு/ தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமைக்குரிய கடிதம்

V. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 03வது வினைத்திறன்காண் தடைதாண்டலை பூர்த்தி செய்வதற்குரிய முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா அல்லது கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா சான்றிதழ்

VI. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு நியமனம் பெற்ற நாள் முதல் 2024.07.12/2024.09.06ம் திகதி வரையில் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளதாகவும், மொத்த சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்று ரீதியில் தண்டனைகளுக்கு உட்படவில்லை என்பதாகவும், சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுள்ளதாகவும், சம்பளமற்ற விடுமுறை பெறவில்லை எனவும், உரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகள் அனைத்திலும் சித்தியடைந்துள்ளதாகவும், பிரதம ஆணையாளர்/ பீடாதிபதி/ வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் (இணைப்பு 01)

VII. மேலதிக கல்வித் தகைமைகள் – விண்ணப்பப் படிவங்களைக் கோரும் அறிவித்தலின் புள்ளி வழங்கல் திட்டத்தில் தொடர் இலக்கம் 02 இன் கீழ் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றிதழ்கள்

VIII. புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 04 கீழ் தகவல்கள் தொடர்பாடல் அறிவு சார்ந்ததாக பெற்றுள்ள சான்றிதழ்கள்

**குறிப்பு :**

1. சான்றிதழ்களில் பாடநெறிக் காலம் குறிப்பிடப்படவில்லை எனின் அக் காலத்தை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதம் ஒன்றை நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்த வேண்டும்.

2. வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட பட்டச் சான்றிதழ் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பட்டமளிப்பு நிறுவனம் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் ஒன்று முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

IX. புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 05 இன் கீழ் கீழ்வரும் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக,

a. புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்விச் செயலாளர்/ பிரதம ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ள அல்லது அரச அங்கீகாரம் பெற்ற/ அரச சார்புடைய நிறுவனமொன்றினால் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள்

b. கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரால் 230பீ பாராட்டு மற்றும் குறைகூறல் மாதிரிப் படிவத்திற்கமைய முறைப்படி வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்கள்

**குறிப்பு:** *புள்ளி வழங்கல் திட்டத்தின் 5.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய சான்றிதழ்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை தாங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் திணைக்களத் தலைவர் எனப்படுபவர் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) ஆவார்*

X. *ஆராய்ச்சி மற்றும் வெளியீடு*

a. *விண்ணப்பப் படிவங்களைக் கோருவதற்கான அறிவித்தலின் புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 06 இன் கீழ் தாங்கள் முன்னிலைப்படுத்த எதிர்பார்க்கும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை முன்னிலைப்படுத்தும் போது அவ் ஆராய்ச்சி/ வெளியீடு யாது என்பது தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள பக்கம்/ பக்கங்கள், அவ் ஆராய்ச்சி/ நூல்/ வெளியீட்டில் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம்/ பக்கங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் உரிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் மூலப் பிரதிகளையும் முன்னிலைப்படுத்த வேண்டும்.*

04. *இணைப்பு மொழித் தேர்ச்சி*

I. *கல்வித் துறைக்குரியதாக வழங்கப்படும் சில தலைப்புக்களுள் எதேர்ச்சையாக தெரிவு செய்யப்படும் தலைப்பு ஒன்றின் கீழ் 03 நிமிடங்களுக்கான முன்வைப்பு ஒன்றை ஆங்கில மொழியில் முன்வைத்தல் வேண்டும்.*

II. *குறித்த முன்வைப்பிற்கு தயாராவதற்காக தங்களுக்கு 20 நிமிடங்கள் வழங்கப்படும்.*

III. *அந்த முன்வைப்பினை அடிப்படையாக கொண்டு நேர்முகப் பரீட்சை சபையினரால் கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.*

a) *விடய உள்ளடக்கம்* - *02 புள்ளிகள்*

b) *முன்வைப்பு பாணி* - *02 புள்ளிகள்*

c) *மொழிக் கையாளுகை* - *02 புள்ளிகள்*

5. *நேர்முகப் பரீட்சையின் போது தங்களால் வெளிக்காட்டப்படும் ஒட்டுமொத்த திறன் மற்றும் ஆளுமைக்காக தங்களுக்கு 05 புள்ளிகள் வழங்கப்படும்.*

6. *நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்பதற்காக பிரயாணச் செலவோ அல்லது வேறு எந்தவிதமான கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.*

7. *நேர்முகப் பரீட்சையின் போது தங்களால் வெளிக்காட்டப்படும் செயல்திறன் மற்றும் தங்களது கல்வித் தகைமைகளுக்கமைய பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த திறமை முன்னுரிமைக்கமைய மாத்திரம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பீடாதிபதி/ உப பீடாதிபதி/ அதிபர் பதவிக்கு நியமனம் வழங்கப்படும்.*

8. இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது அல்லது தோற்றுவது மாத்திரம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் பீடாதிபதி/ உப பீடாதிபதி/ அதிபர் பதவியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையல்ல என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ ஜே.எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்

ஆர்.ஜீ.டீ ஜமிந்த
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கல்விச் சேவைகள் தாபனம்)

கவனத்திற்கு: இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் வார நாட்களில் கடமை நேரத்தினுள் 0112-787083 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்துவீர்களாயின் நன்று.